# தமிழ்நாடு அரசு
## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
## வட்டாட்சியர் அலுவலகம், திருவேங்கடம் வட்டம்,
## தென்காசி மாவட்டம்

அறிவிக்கை எண்:1/2025 நாள்:11.07.2025

தென்காசி மாவட்ட வருவாய் அலகில், திருவேங்கடம் வட்டத்தில் காலியாகவுள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 14.07.2025 |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 12.08.2025 (செவ்வாய்க் கிழமை) |
| வாசிப்பு மற்றும் எழுத்து திறன் தேர்வு நடைபெறும் நாள் | 17.09.2025 (மாறுதலுக்குட்பட்டது) |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | 09.10.2025 (வியாழன்) முதல் 15.10.2025 (புதன்) வரை |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் LEVEL - 6- (ரூ.11,100 – 35,100) |
| வட்டத்தின் பெயர் | திருவேங்கடம் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | நிரப்பப்படவுள்ள கிராமத்தின் விபரம் |
| 01 | 11.சங்குப்பட்டி |

இனச்சுழற்சி விபரம்

| வ. எண். | இனச்சுழற்சி எண். | வகுப்பு | பொது/ பெண் | முன்னுரிமை பெற்றவர்/ முன்னுரிமை அற்றவர் | இட ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 1. | 07 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (Most backward class and denotified community) | பெண் | முன்னுரிமை அற்றவர் | ஆதரவற்ற விதவை |

| | |
|---|---|
| கல்வித்தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு தேர்வில் (SSLC Secondery School Leaving Certificate Examination) தமிழை ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும். (குறைந்தபட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தோல்வி) |
| இதர தகுதிகள் | ➤ விண்ணப்பதாரர் திருவேங்கடம் வட்டத்தை சேர்ந்தவராகவும், அதே வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவராகவும் இருத்தல் வேண்டும்.<br>➤ தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>➤ உடற்தகுதி சான்று சமர்ப்பிக்க வேண்டும்.<br>➤ தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நபரின் கணவரோ அல்லது மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்க கூடாது.<br>➤ சைக்கிள் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.<br>➤ விண்ணப்பத்துடன் அனைத்து சான்றுகளின் சான்றொப்பமிட்ட நகல்கள் இணைக்க வேண்டும்.<br>➤ எந்தவித குற்றவழக்கிலும் ஈடுபடாதவராக இருக்க வேண்டும்.<br>➤ விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்திற்காக எவ்வித பரிந்துரை நாடக்கூடாது. எவ்வகையிலாவது பரிந்துரை செய்வது தெரியவரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| வயது வரம்பு | 14.07.2025 அன்று 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.<br>அதிகபட்சம்-இதர வகுப்பினர் 32 வயது.<br>பிற்படுத்தப்பட்ட/மிகவும்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர்/பட்டியலினத்தர்/பழங்குடியினர் –37 வயது (அரசாணை (நிலை) எண் 91 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை. நாள் 13.09.2021–இன் படி) | |
| | முன்னாள் இராணுவத்தினர் | இதர வகுப்பினர் - 48 ஆண்டுகள்<br>பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/ சீர் மரபினர் /பட்டியலினத்தவர்/பழங்குடியினர்–53 ஆண்டுகள் (Tamil Nadu Govt Servants (Conditions of Service) Act-2016. |
| | மாற்றுத்திறனாளிகள் | நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் விதித் தளர்வு (Tamil Nadu Govt Servants (Conditions of Service) Act-2016. |
| விண்ணப்பிக்கும் முறை | ➤ விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்காக விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அளித்து விண்ணப்பிக்கலாம்.<br>➤ மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவங்களை https://tenkasi.nic.in என்ற இணையதள முகவரியை அணுகி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். | |

வருவாய் வட்டாட்சியர்,
திருவேங்கடம்

வெ.ஆ.எண்.91/2025/தெ.ம.தொ.அ/தெ.கா.மா/ நாள்: 13.07.2025

Scanned with OKEN Scanner